**ஜூலை – 31**

# TNPSC துளிகள்

- பல் மருத்துவம் மற்றும் மருத்துவப் படிப்பிற்கு சுயநிதி நிகர்நிலைப் பல்கலைக்கழகங்களால் விதிக்கப்படும் கட்டணங்களை முறைப்படுத்த பல்கலைக்கழக மானியக் குழுவானது (University Grants Commission - UGC) பேராசிரியர் R.C.ரேகா தலைமையில் குழு ஒன்றை அமைத்துள்ளது. இவர் புது தில்லியில் உள்ள எய்ம்ஸ் மருத்துவமனையின் (AIIMS - All India Institutes of Medical Sciences) முன்னாள் இயக்குநர் ஆவார்.
- முதன்முறையாக 2018-19 கல்வியாண்டில் மிசோரமில் உள்ள சைனிக் பள்ளியில் பெண் குழந்தைகள் கல்வி பயில அனுமதிக்கப்பட்டுள்ளனர். இது சோதனை முயற்சியாக தொடங்கப்பட்டுள்ளது.
- இந்திய இராணுவம் 81 அதிக இயங்குதிறனுடைய 10 x 10 வாகனங்களைத் தயாரிக்க இந்தியாவின் முன்னணி வாகனத் தயாரிப்பு நிறுவனமான அசோக் லைலாண்ட் நிறுவனத்துடன் 100 கோடிக்கு ஒப்பந்தம் செய்துள்ளது. முதன்முறையாக இறக்குமதி வாகனங்களை சார்ந்திருப்பதை குறைப்பதற்காக அதிக வலுவுடைய மற்றும் அதிக இயங்குதிறன் கொண்ட வாகனங்களை இந்திய வாகனத் தயாரிப்பு நிறுவனம் தயாரிக்கிறது.
- 2019ஆம் ஆண்டிலிருந்து பிரதம மந்திரியின் ஆராய்ச்சி உதவித் தொகையானது ஆற்றல் வளமிக்க அனைத்து ஆராய்ச்சியாளர்களுக்கும் வழங்கப்படும் என்று மத்திய அரசு அறிவித்துள்ளது. இதற்கு முன்பு IISc (Indian Institute of Science), IIT (Indian Institutes of Technology), NIT (National Institutes of Technology), IIEST (Indian Institute of Engineering Science) and Technology) மற்றும் IISER (Indian Institutes of Science Education and Research) ஆகிய துறையில் உள்ள மாணவர்களுக்கு மட்டும் வழங்கப்பட்டது.

# தமிழ்நாடு செய்திகள்

## ஸ்டார் 2.0

- 2018 ஆகஸ்ட் மாதத்திலிருந்து கல்யாணங்கள், சீட்டு (நிதி) நிறுவனங்கள் மற்றும் கூட்டுறவு சங்கங்கள் ஆகியவற்றை ஆன்லைனில் பதிவு செய்வதற்கான திட்டத்தை தமிழ்நாடு அரசு தொடங்கியுள்ளது.
- தமிழ்நாட்டின் ஆன்லைன் சொத்துப் பதிவு இணைய வாசல் (எளிமையாக்குதல் மற்றும் வெளிப்படையான நிர்வாகத்திற்கான பதிவுகள் 2.0) டிசிஎஸ் நிறுவனத்தால் வடிவமைக்கப்பட்டுள்ளது.

# தேசியச் செய்திகள்

## பாதிக்கப்பட்ட அனல் மின் நிலையங்களை புதுப்பிப்பதற்கான அதிகாரமளிக்கப்பட்ட குழு

- பாதிக்கப்பட்ட அனல் மின் நிலையங்களின் பிரச்சினைகளை குறிப்பிட்டுக் காட்டுவதற்காக அமைச்சரவை செயலாளர் தலைமையிலான அதிகாரமளிக்கப்பட்ட உயர்நிலைக் குழுவினை மத்திய அரசு அமைத்துள்ளது.
- இக்குழு ரயில்வே அமைச்சகம், நிதி அமைச்சகம், மின்துறை அமைச்சகம், நிலக்கரி அமைச்சகம் மற்றும் மின்சாரத் துறையில் அதிக ஈடுபாடு கொண்டு கடன் வழங்குபவர்கள் ஆகியவர்களை பிரதிநிதிகளாகக் கொண்டுள்ளது.

## இந்தியாவின் முதல் திறந்த கைபேசி பரிமாற்று மண்டலம் தொடங்கி வைக்கப்பட்டது

- நாட்டின் முதல் திறந்த கைபேசி பரிமாற்று மண்டலத்திற்கான (Mobile Open Exchange - MOX) அடிக்கல்லினை இந்தியப் பிரதமர் உத்திரப் பிரதேசத்தின் நொய்டாவில் நாட்டினார்.
- மாநிலத்தில் கைபேசி மற்றும் அதன் தொடர்பான துறைகளின் வளர்ச்சிக்கு தூண்டுகோலாக இருக்கும் Tech Zone-ஐ மேம்படுத்துவதற்காக உத்திரப் பிரதேச முதலீட்டாளர்களின் உச்சி மாநாட்டில் நொய்டாவின் உலக வர்த்தக மையத்துடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் உத்தரப் பிரதேச அரசு கையெழுத்திட்டுள்ளது.
- MOX ஆனது கைபேசி தயாரிப்பாளர்கள், ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு (R & D - Research and Development) மற்றும் அது தொடர்பான தொழிற்சாலைகளுக்கு ஒருங்கிணைந்த மேடையை வழங்குவதற்காக கைபேசி தொழிற்துறைக்கு அர்ப்பணிக்கப்பட உள்ள நடைமுறை ஆகும்.

# பொருளாதாரச் செய்திகள்

## உலக நம்பிக்கைக் குறியீடு 2018

- 2018-ன் இரண்டாம் கால் பகுதியில் (Q2) மிதமான வணிக நம்பிக்கையுடன் உலக நம்பிக்கைக் குறியீட்டில் இந்தியா 6வது இடத்தில் உள்ளது.
- இக்குறியீடு காலாண்டிற்கு ஒருமுறை உலக வணிக கணக்கெடுப்பாக வெளியிடப்படும் கிராண்ட் தார்ன்டனின் சர்வதேச வணிக அறிக்கையின் (International Business Report - IBR) ஒரு பகுதியாக வெளியிடப்பட்டுள்ளது.
- 2018-ம் ஆண்டின் இரண்டாம் கால்பகுதிக்கான உலக நம்பிக்கைக் குறியீடு 2018 ன் முதல் காலாண்டில் 61% லிருந்து இரண்டாம் காலாண்டில் 54 % ஆக குறைந்துள்ளது. வருவாய் உயர்வில் வணிக நிறுவனங்கள் நம்பிக்கையான நிலையில் உள்ளன.
- சமீபத்தில் இந்தியா 6வது மிகப்பெரிய பொருளாதாரமாக உலக வங்கியால் அறிவிக்கப்பட்டது. இதில் பிரான்சை இந்தியா முந்தியது.

### கடனளிப்போர்களுக்கிடையேயான ஒப்பந்தம் (Inter Creditor Agreement - ICA)

- தொழிற்கூட்டமைப்பு கடனளிப்பின் கீழ் 50 கோடி ரூபாய் (அ) அதற்கு மேற்பட்ட பாதிப்புக்குள்ளான சொத்துக்களை விரைவாக பிரிப்பதனை நோக்கமாக கொண்டு கடனளிப்போர்களுக்கு இடையேயான ஒப்பந்தத்தில் வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்கள் கையெழுத்திட்டன.
- ICA கட்டமைப்பு 'சஷாக்' திட்டத்தின் ஒரு பகுதியாகும்.
- இதன் கீழ், முன்னணி கடனளிப்பவர் அவரின் ஒப்புதலுக்காக வழங்கப்பட்ட சொத்துக்களின் மீட்பு நடவடிக்கைக்கான உறுதித் திட்டங்களை முறைப்படுத்துவதற்கு அதிகாரமளிக்கப்படுவார்.
- ICA-வின் கீழ் முறைப்படுத்தப்பட்ட இந்தத் திட்டங்கள் RBI-ன் விதிமுறைகள் மற்றும் இதர அனைத்து சட்டங்கள் மற்றும் வழிகாட்டுதல்கள் ஆகியவற்றோடு உடன்பாட்டுடன் இருக்கும்.
- பாதிப்புக்குள்ளான சொத்துக்களை மீட்பதற்கான ஒருங்கிணைந்த நடவடிக்கைகளில் வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்கள் இணைந்து ஒரு மேடையாக செயல்பட இந்த ஒப்பந்தமானது அரசால் அமைக்கப்பட்ட சுனில் மேத்தா குழுவின் பரிந்துரைகளுக்குப் பிறகு இந்திய வங்கிகள் சங்கத்தின் மேற்பார்வையின் கீழ் தயாரிக்கப்பட்டது.

## அறிவியல் மற்றும் தொழில்நுட்பச்செய்திகள்

### நிலத்திலிருந்து வானிற்கு ஏவக்கூடிய தேசிய உயர்தர ஏவுகணை அமைப்பு - II

- நிலத்திலிருந்து வானிற்கு ஏவக்கூடிய தேசிய உயர்தர ஏவுகணை அமைப்பு – IIவினை (National Advanced Surface-to-Air Missile System - II - NASAMS - II) வாங்குவதற்கு அமெரிக்காவுடன் பேச்சுவார்த்தையில் இந்தியா ஈடுபட்டுள்ளது.



- இது வான்வழி தாக்குதல்களிலிருந்து தேசிய தலைநகரப் பகுதிகளை பாதுகாப்பதற்கான உயர்தர வான்வழி பாதுகாப்பு அமைப்பு ஆகும்.

- நார்வேயின் KONGSBERG பாதுகாப்பு மற்றும் விண்வெளி மையத்துடன் இணைந்து ரெய்தியேன் என்ற நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட NASAMS-ன் மேம்படுத்தப்பட்ட பதிப்பு NASAMS-II ஆகும்.
- இது 2007-லிருந்து செயல்பாட்டில் உள்ளது.
- NASAMS-II ஆனது அமெரிக்காவின் தலைநகர் வாஷிங்டன் DC-யினை பாதுகாக்கும் வான்வழி பாதுகாப்பு பிணையத்தின் ஒரு பகுதியாகும்.
- இதன்மூலம் நாட்டின் தலைநகரத்தினை பாதுகாப்பதற்கான சொந்த ஏவுகணை பாதுகாப்பு அமைப்பினைக் கொண்ட நாடுகளான அமெரிக்கா, ரஷ்யா மற்றும் இஸ்ரேல் உள்ளிட்ட நாடுகளுடன் இந்தியா இணைய உள்ளது.

### உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட உயர் ஆற்றல் கொண்ட பல்எரிபொருள் இயந்திரங்கள்

- உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட இரண்டு வகையான உயர் ஆற்றல் கொண்ட பல் எரிபொருள் இயந்திரங்கள் V-46-6 மற்றும் V92S2 ஆகியவை மேக் இன் இந்தியா திட்டத்தின் கீழ் முதன் முறையாக இந்திய இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டன.
- படைக்கருவிகள் தொழிற்சாலை கழகத்தின் (Ordnance Factory Board - OFB) ஒரு பிரிவான ஆவடி இயந்திரங்கள் தொழிற்சாலையினால் இந்த இயந்திரங்கள் தயாரிக்கப்பட்டன.
- இந்த இயந்திரங்கள் ரஷ்ய வடிவமைப்பின் அடிப்படையில் அமைக்கப்பட்டதாகும். V92S2 என்பது ஒரு 1000 குதிரை ஆற்றல் செயல்திறன் கொண்ட அதிக ஆற்றலுடைய டீசல் இயந்திரமாகும். மேலும் இது T-90 போர் பீரங்கியுடன் (பீஸ்மா பீரங்கி) பொருத்தப்பட்டுள்ளது.
- V46-6 என்பது 780 HP கொண்ட அதிக ஆற்றலுடைய டீசல் என்ஜினாகும். இது முக்கியப் போர் பீரங்கியான T-72 ல் பொருத்தப்பட்டுள்ளது (அஜயா பீரங்கி).

## விளையாட்டுச் செய்திகள்

### டெஸ்ட் இன்னிங்ஸில் 9 விக்கெட்டுகளைக் கைப்பற்றிய இரண்டாவது தென்னாப்பிரிக்க வீரர்

- டெஸ்ட் போட்டியின் ஒரு இன்னிங்ஸில் 9 விக்கெட்களை கைப்பற்றிய இரண்டாவது தென்னாப்பிரிக்க வீரர் கேசவ் மகாராஜ் ஆவார். இவர் தென்னாப்பிரிக்காவின் சுழற்பந்து வீச்சாளர் ஆவார்.
- 1996ஆம் ஆண்டு கொல்கத்தாவில் நடைபெற்ற போட்டியில் லான்ஸ் குளுஸ்னர் 64 ரன்களுக்கு 8 விக்கெட்டுகளை வீழ்த்தினார். இச்சாதனையை கேசவ் மகாராஜ் முறியடித்துள்ளார்.
- கொழும்புவின் எஸ்எஸ்சி மைதானத்தில் இலங்கைக்கு எதிரான 2வது டெஸ்ட் தொடரின் இரண்டாவது நாள் ஆட்டத்தில் 129 ரன்களுக்கு 9 விக்கெட்டுகளை வீழ்த்தி சிறப்பான ஆட்டத்தை மகாராஜ் வெளிப்படுத்தினார்.



- 1957ஆம் ஆண்டு ஜோகன்ஸ்பெர்கில் நடைபெற்ற இங்கிலாந்துக்கு எதிரான போட்டியில் தென் ஆப்பிக்காவின் ஹியுக் தேபீல்டு 113 ரன்களுக்கு 9 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார்.
- ஒட்டுமொத்தமாக மகாராஜ் இச்சாதனையை எட்டும் 19வது வீரர் ஆவார்.
- ஜிம் லேக்கர் (10/53) மற்றும் அனில் கும்ப்ளே (10/74) ஆகிய இருவர் மட்டும் டெஸ்ட் போட்டியின் ஒரே இன்னிங்ஸில் பத்து விக்கெட்டுகளையும் வீழ்த்தியுள்ளனர்.

## 15வது தேசிய இளையோர் தடகள சாம்பியன்ஷிப் போட்டிகள்

- வதோதராவின் மன்ஜல்பூரில் உள்ள விளையாட்டு மைதானத்தில் 15-வது தேசிய இளையோர் தடகள சாம்பியன்ஷிப் போட்டிகள் நடைபெற்றன.
- இந்திய தடகள சங்கத்தின் கீழ் இயங்கும் குஜராத் மாநில தொழில்சாரா தடகள கூட்டமைப்பு இப்போட்டியை நடத்தியது.
- இப்போட்டியில் தன்வீர் மற்றும் 100 மீட்டர் தடை ஓட்டத்தில் தங்கம் பெற்றவரான அபர்ணா ராய் ஆகியோர் ‘சிறந்த தடகள வீரர்களாக’ அறிவிக்கப்பட்டுள்ளனர்.
- அணிகளுக்கான சாம்பியன்ஷிப் பட்டத்தை ஹரியானா வென்றுள்ளது. இதில் கேரளா இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளது.
- ஹரியானாவின் தடகள வீரர் மோஹித் குமார் ஆண்களுக்கான டெக்கத்லானில் 6707 புள்ளிகளைப் பெற்று சாதனை படைத்துள்ளார். இதற்கு முன் கடந்த வருடம் சங்வான் 6618 புள்ளிகள் பெற்றார்.
- போல்வால்ட்டில் 4.90 மீ உயரம் தாண்டிய இளைஞரான ராகேஷ் கோண்ட் தேசிய அளவில் சாதனை படைத்துள்ளார். இதற்கு முன் 2017ஆம் ஆண்டு கன்ஹய்யா சிங் 475 மீ உயரம் தாண்டியதே சாதனையாக இருந்தது.
- பஞ்சாபின் குண்டெறிதல் வீரரான தன்வீர் சிங் தனது ஐந்தாவது முயற்சியில் 19.69 மீ தூரத்திற்கு குண்டை எறிந்து சாதனை நிகழ்த்தியுள்ளார். இதற்கு முன் 2011ஆம் ஆண்டு 19.34 மீ தூரத்திற்கு நவ்தேஜ்தீப் சிங் குண்டெறிந்ததே சாதனையாக இருந்தது.
- கேரளாவின் விஷ்ணுப்பிரியா பெண்களுக்கான 400 மீ தடை ஓட்டத்தில் 1:02.52

வினாடிகளில் வெற்றி பெற்று சாதனை படைத்துள்ளார்.

- இதற்கு முன் 2015ஆம் ஆண்டு PO சன்யா 1 : 02.58 வினாடிகளில் 400 மீ தடை ஓட்டத்தில் வெற்றி பெற்றதே சாதனையாக இருந்தது.

- - - - - - - - - - - - - - -